1967 நவம்பர் 24]

செய்யவும், அதிகம் பால் தரக்கூடிய பசுக்களை இறக்குமதி செய்யவும் இந்த அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலிலேயே நான் குறிப்பிட்டேன். இந்த 169 லட்சம் ரூபாய்த் திட்டத்தில் 86 லட்சம் ரூபாய் பால்பண்ணையை அங்கே உருவாக்குவதற்காகவே திட்டமிடப்பட்டுள்ளது. பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

சிறிய கார் தயாரிக்கும் திட்டம்

* 415 வினா.—திரு. ஏ. எம். ராஜா :
திரு. கே. விநாயகம் :
திரு. வை. சுவாமிநாதன்:
} மதிப்பிற்குரிய கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறிய கார் தயார் செய்யும் திட்டம் தமிழக அரசுக்கு உண்டா ?

(இ) இது குறித்து தனியார் துறையிலிருந்து அனுமதி கோரி விண்ணப்பம் ஏதேனும் தமிழக அரசுக்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

திரு. ஏ. எம். ராஜா : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நாட்டில் சிறிய கார்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும், கார்களின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை முன்னிட்டும், நாட்டிலே பலருக்குத் தொழில் வாய்ப்புகள் ஏற்படுகின்ற காரணத்தை முன்னிட்டும், தமிழகத்தில் சிறிய கார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்காக மத்திய சர்க்காரை தமிழக அரசு வற்புறுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறிய கார் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற முயற்சிகள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களாலும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் அதைப்பற்றி முடிவுசெய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. மத்திய அரசு அதிலே திட்டவட்டமான முடிவொன்றும் இன்னும் எடுக்கவில்லை. கார் செய்வதற்கான அனுமதி கிடைக்கின்ற வாய்ப்பு இருக்குமானால், அதைச் செய்வதற்கான தூண்டுதலைச் செய்து வேண்டியவற்றைச் செய்ய அரசு முயற்சி செய்யும். ரங்கூனிலிருந்து திரு. என். கே. பிள்ளை என்பவர் இதற்கான விருப்பம் தெரிவித்திருப்பதாக ஒரு கடிதம், கையொப்பமிடாத கடிதம் ஒன்று வந்திருக்கிறது. அதிலே செய்வதற்கான முறை பற்றி திட்ட வட்டமாக, தெளிவாக எதுவும் சொல்லப்படவில்லை. இந்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைத்தால் முறைப்படி இதற்காக விண்ணப்பம் யாராவது செய்வார்களானால் அதற்கான முயற்சியை இந்த அரசு செய்யும்.

THIRU K. VINAYAKAM : Sir, on the floor of the Parliament a series of questions were put regarding the manufacture of the small car and the Government of India have been willing to accede to the request of any State Government which come forward to start it. So, will the Madras Government request the Central Government to establish a unit in the Madras State and in such a case will the Government invest a reasonable amount of money on this Project with the help of private entrepreneurs?

THE HON. THIRU C. N. ANNADURAI : The history of the Small Car Project is very interesting. During discussions in the Parliament there were assurances that there would be manufacture of small cars.

THIRU K. VINAYAKAM : At that time the Hon. Chief Minister was a Member of the Rajya Sabha and he put questions on it.

THE HON. THIRU C. N. ANNADURAI : My hon. Friend, Thiru Subramaniam was also there to answer it. They gave assurances but afterwards they thought that it would not be economical. Therefore, the Government of India have not given their word of assurance for the manufacture of small cars. But certain States like Mysore have come forward with such a proposal and they have approached the Centre. I do not know whether the Central Government have given the green signal for the Mysore Government and if our sister State gets that green signal, naturally we would press the Centre to allow us to do it.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தலைவரவர்களே, சமீபத்தில் திரு. ஜி டி. நாயுடு அவர்கள் 5 ஆயிரம் ரூபாய் செலவில் நல்ல முறையில் சிறிய கார்கள் செய்ய முடியுமென்று ஏதாவது அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட திட்டம் எதுவும் வரவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சிறிய கார்கள் செய்வதற்குக் கம்பெனிகளை ஆரம்பிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். இப்பொழுது வரக்கூடிய கார்களில் கையை வைத்தாலே சொட்டை விழக்கூடிய நிலைமையில் இலேசான தகடுகளால் தயாரித்து அதன்மூலம் கொள்ளை லாபம் அடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறதே, இது விஷயமாக சர்காருடைய கருத்து என்ன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இந்தச் சர்க்காருடைய கருத்து இதைப்பற்றி கார் கம்பெனிகளுக்குத் தெரியப் படுத்துவதுதான்.

DR. H. V. HANDE : The grant of permission for the manufacture of the car is not in the hands of the State Government. So, have the Government thought of inviting the private entrepreneurs in our State to start a Small Car Project and if they are prepared to start it, just as the Mysore State is pressing the Central

Government to give permission for such a project, will this Government also press the Central Government to grant permission for the private entrepreneurs in the Madras State also to start it ? I want to know, what are the steps which this Government are going to take in this direction ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் கூறுவதைப்போன்று யாராவது சிறிய கார் செய்யும் திட்டத்துடன் திட்டவட்டமாக இந்த அரசாங்கத்தை அணுகினால் அது முறைப்படி இந்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தப்படும்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : மற்ற மாநிலங்களில் இல்லாத வகையில், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை சிறிய கார் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய பொறியியல் நிபுணர்களும், அதற்குத் தேவைப்படும் துணை பொருள் உற்பத்தி நிலையங்களும் இங்கு இருப்பதால் நம்முடைய தமிழக அரசு தமிழகத்திலே அதற்கான முயற்சியை மேற்கொண்டு இந்தத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே தெரிவித்தபடி, சிறிய கார் உற்பத்தி செய்வதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியதற்குப் பிறகு தமிழக அரசு, தமிழகத்திலே அப்படிப்பட்ட திட்டத்துடன் யாராவது முன்வருவார்களானால் அது எந்த எந்த வகையிலே, இயலுமோ அந்த அந்த வகையிலே கவனிக்கப்படும்.

Marine diesel engines

*416 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Government have rejected the establishment of a factory at Ennore for the manufacture of engines and its parts for ship-building in our State; and

(*b*) if so, the reasons, therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) செக்கோஸ்லோவாக்கியா நாட்டு உடனுழைப்புடன் மரீன் டீசல் பொறிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை எண்ணூரில் அமைக்கலாம் என முதலில் இந்திய அரசு எண்ணியது. ஆனால் வல்லுநர் குழுவின் யோசனையின்மேல் அத்திட்டத்தை ராஞ்சியில் அமைப்பதென இறுதியாக முடிவு செய்தது. இப்பொழுது மரீன் டீசல் பொறிகளை உற்பத்தி செய்ய ஜப்பானிய நாட்டு உடனுழைப்புடன் கல்கத்தாவிலுள்ள மத்திய பீனளக் கார்ப்பரேஷனின் மூலம் ஒரு தொழிற்சாலையை எண்ணூரில் அமைக்க இந்திய அரசு எண்ணுகிறது. இத்திட்டத்திற்காக மேற்படி கார்ப்பரேஷனுக்குத் தொழில் உரிமம் இன்னும் வழங்கப்படவில்லை.